விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மைலம் சட்டமன்றத் தொகுதி கூட்டேரிப்பட்டு மயிலம் சாலையில் அமைக்கப்பட்டகலைஞர் நூலகத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

வி.எல்.ஜோதி – செல்வி ஜோதி தலைமை! மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் – அரக்கோணம்

ஜி.ஜெனிஷ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் ஆர்.காந்தி வாழ்த்துரை!

எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – வினோத்காந்தி – கழகத்தினர் பங்கேற்பு!

இராணிப்பேட்டை, செப். 13-

இராணிப்பேட்டை மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அரக்கோணம் ஜி. ஜெனிஷ்குமாரின் சகோதரரும், டி.ஜார்ஜ் - ஜி.மேரி ஆகியோரின் புதல்வருமான ஜி.பூவரசனுக்கும், திருவள்ளூர் மாவட்டம் ஆர்.கே.பேட்டை வட்டம் ஜி.சிவக்குமார் - எஸ்.தீபா ஆகியோரின் புதல்வி எஸ். மௌனிகாவுக்கும் மணவிழா வரவேற்பு 16.9.2024 திங்கள்கிழமை மாலை 6.30 மணியளவில் அரக்கோணம் பழைய பேருந்து நிலையம், தூய அந்திரேயர் ஆலய வளாகத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு அரக்கோணம் நகரக் கழகச் செயலாளர் வி.எல். ஜோதி, திருமதி செல்வி ஜோதி ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., வினோத்காந்தி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.எ., ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., எஸ்.சந்திரன் எம்.எல்.எ., மேயர் பிரியா ராஜன், பா.மணிமாறன், வழக்கறிஞர் மு.சரவணன், லட்சுமிபாரி, கே.சுஜாதா வினோத், சிவா, ம.கிரண், பன்னீர்செல்வம்,

ஏ.கே.சுந்தரமூர்த்தி, எஸ்.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், மு.கண்ணையன், ஏ.அசோகன், ஆர்.தமிழ்செல்வன், கே.பசுபதி, ஏ.சவுந்தர், பெ.வடிவேல், பெருமாள், எஸ்.நாகராஜ், ஜி.டில்லி பாபு, கே.பி.வெங்கடேசன், எம்.கே.சிவா, எஸ்.சரவணகுமார், ஜெ.தென் கோஸ்கோ, எஸ்.பிரசாத், ஜெ.நவின்ராஜ், துரை சீனிவாசன், கலாவதி அன்பு லாரன்ஸ், கோ.வா.தமிழ் வாணன், ஏ.அன்பு லாரன்ஸ், நந்தாதேவி, எஸ்.ரமேஷ்பாபு, ஆர். கே.லிங்கம், வி.பாலன், அ.தமின் அன்சாரி, என். அரிகிருஷ்ணன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

என்.ராஜ்குமார் நன்றி கூறுகிறார்.

ஜி.ஜெனித்குமார் - பிரியா, ஜி.கிரியோன் மேத்யூ - ஜெமிசேகரின், ஜி.ஜான் மனோ - ஜெ.பிரியதர்ஷினி ஆகியோர் இம்மணவிழா வரவேற்பிற்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்கிறார்.

நாடுமுழுவதும்

ஐ.ஐ.டி.க்களில் ஆசிரியர் நியமனத்தில் இட ஒதுக்கீடு புறக்கணிப்பு!

மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. கண்டனம்!

சென்னை,செப். 13-

நாடு முழுவதும் உள்ள ஐ.ஐ.டி.க்களில் ஆசிரியர்கள் நியமனத்தில் இடஒதுக்கீடு புறக்கணிக்கப்படுவது ஆர்.டி.ஐ மூலம் அம்பலமனதாக தி.மு.க. எம்.பி வில்சன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது:

நாடு முழுவதும் 23 ஐ.ஐ.டி.க்கள் உள்ளன.

அவை இந்திய அரசால் நிறுவப்பட்ட உச்ச அமைப்பான ஐ.ஐ.டி கவுன்சிலால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒன்றிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் (தற்போது கல்வி அமைச்சர்) இந்த கவுன்சிலின் அதிகாரபூர்வ தலைவராக பணியாற்றுகிறார்.

ஐ.ஐ.டி.களில் ஆசிரிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பில் எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி.யினருக்கு இடஒதுக்கீட்டை அமல்படுத்த ஐ.ஐ.டி கவுன்சிலின் நிலைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஐ.ஐ.டி கவுன்சிலின் தலைவர் இந்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இடஒதுக்கீட்டை அமல்படுத்தினார்.

எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி பிரிவினருக்கான இந்த இட ஒதுக்கீடு முறையாகப்பின்பற்றப்படுகிறதா அல்லது இந்த ஐ.ஐ.டிகளில் வெறும் உதட்டளவில் மட்டுமே உள்ளதா என்பதை ஆராய வேண்டியது அவசியமாகிறது.

ஒரு உதாரணமானது சில சட்டவிரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், அகில இந்திய ஓ.பி.சி மாணவர் சங்கத்தின் தேசிய தலைவர் கிரண்குமார் எழுப்பிய கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில், காந்திநகர் ஐ.ஐ.டி.யில் அரசியலமைப்பு இடஒதுக்கீடு பின்பற்றப்படாததை வெளிப்படுத்துகிறது.

இங்கு மொத்த பேராசிரியர்களின் எண்ணிக்கை 190. இதில் தற்போது பொதுப் பிரிவில் 116 பேரும், ஓ.பி.சி. பிரிவில் 8 பேரும், எஸ்.சி. பிரிவில் 7 பேரும், எஸ்.டி. பிரிவில் 4 பேரும் என மொத்தம் 135 பேராசிரியர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கை அரசியலமைப்பு இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதை மீறுகிறது.

ஐ.ஐ.டி. கவுன்சிலின் தலைவர் என்கிற முறையில், தர்மேந்திர பிரதான் விளிம்புநிலை பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை அவ்வப்போது மறுபரிசீலனை செய்வதும், ஏதேனும் பிறழ்ச்சி இருந்தால் அதற்கு அந்தந்த ஐ.ஐ.டி.களின் இயக்குநர்களை பொறுப்பேற்கச் செய்வதும், ஒழுங்கு நடவடிக்கையைத் தொடங்குவதும் அவசியம் ஆகும்.

எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓ.பி.சி பிரிவினருக்கான இட ஒதுக்கீடு மறுக்கப்படுவதை இந்த சமூகங்களுக்கு எதிரான வன்கொடுமைகளாகக் கருதி, துறைத் தலைவர்களுக்கான தண்டனை உட்பட அந்தந்த சட்டங்களில் திருத்தங்களை முன்மொழியுமாறு ஒன்றிய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், வீரேந்திர குமார், அர்ஜுன் ராம் மெக்வால் ஆகியோரை கேட்டுக் கொள்கிறேன்.

விளிம்புநிலை சமூகங்களை மைய அமைப்பிற்குள் கொண்டு வருவதற்கான ஒரே வழி இதுதான் என்பதோடு மட்டுமல்லாமல், இதன் மூலமே சமூக நீதியை அனைத்து மட்டங்களிலும் செயல்படுத்த முடியும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கழகத்தின் பவள விழா: அண்ணா பிறந்த நாள்:

சேலம் கிழக்கு மாவட்டத்தில் கழகத்தினர் வீடுகளில் கழகக் கொடியேற்றிடுவோம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!

சேலம், செப்.13 -

தி.மு.கழகத்தின் பவள விழா - செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கழகத் தோழர்கள் வீடுகளிலும் கழக கொடியை ஏற்றி பட்டொளி வீசிப் பறக்கச் செய்திடுவோம் என கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்:

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத்தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தி.மு.கழகம் பவள விழா நிறைவு பெறுகிறது. நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆணைக்கிணங்க

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்து, சட்டங்களை உருவாக்கி, இன்று இந்தியாவை வழிநடத்தக் கூடிய வகையில், தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்று திகழ்கிறது என்றால், அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் - உதிரமாகவும் திகழ்கின்ற தி.மு.கழகத்திற்கே உரியது.

இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. எனும் பேரியக்கம், இந்த வரலாற்றுப் பெருமையில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் பங்கு அளப்பரியது.

75 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நிறைவு செய்த பேரியக்கம் வெற்றி - தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, "நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்" என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாகக் கொண்டாட வேண்டும்.

கழகத்தின் பவள விழா ஆண்டு கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் - 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இரு வண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்ற வேண்டும் என்றும்,

இந்த கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில்,

கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசச் செய்திட வேண்டும் என்று நமது நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் என கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க,

கிழக்கு மாவட்ட ஒன்றியம் - நகர - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் உள்ள அனைத்துக் கொடிக்கம்பங்களையும் வர்ணம் தீட்டி புதுப்பித்து வருகிற செப்டம்பர்-15 அண்ணா பிறந்த நாள்அன்று காலை 9.00 மணிக்கு அனைத்து கிளைகளிலும் கழக முன்னோடிகளை வைத்து, கழகக் கொடியை ஏற்றிடுவோம். ஒட்டு மொத்த கழக நிர்வாகிகள் செப்டம்பர் 15-ஆம் தேதி காலையிலேயே கழக கொடி ஏற்றி, கழக கொடி பட்டொளி வீசுவது பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்திட வேண்டும். "கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க." நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில், அனைவரின் இல்லங்களிலும் கழக கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு.கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்று கழகத்தினர் அனைவரையும் இரு கரம் கூப்பி கேட்டுக்கொளகிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் தமது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. – ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வேலூர் மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை!

வேலூர், செப். 13 -

வேலூர் மாநகர தி.மு.க .பொது உறுப்பினர்கள் கூட்டம் பேபி திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாநகர அவைத்தலைவர் சூரி என்ற கோவிந்தன் தலைமை தாங்கினார். மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம். எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் ,

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய் துணை மேயர் எம்.சுனில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம் .எல் .ஏ அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் அவர் பேசியதாவது :

எதிரிகள் கூட பாராட்டுகிற அளவிற்கு இந்த கட்சியிலே நான் இருந்ததால் தான் இன்றைக்கு அண்ணா உட்கார்ந்த இடத்தில் நான் உட்கார்ந்திருக்கிறேன் .

அரசியலில் சில சந்தர்ப்ப சூழல்களில் வெறுப்பு வரும், தோல்வி வரும், அவமானம் வரும், நான் படாத அவமானமா, நான் படாததோல்வியா, நான் சந்திக்காத எதிர்ப்புகளா, எனவேதான் சொல்லுகிறேன் இயக்கத்தில் பிடிப்பு வேண்டும். இளைஞர்கள் வருகிறார்கள், இன்றைக்கு நான் வரவேற்கிறேன் ஏனென்றால் நாங்கள் எல்லாம் இளைஞர்களாக வந்தோம். அண்ணா சொன்னார் நாற்றங்காலில் இருக்கிற பயிர் போல பிடுங்கி சேற்றில் நட்டால் தான் பலன் கொடுக்கும். நாற்றங்காலாகவே விட்டு விட்டால் பாழாகிவிடும் ஆகவே தகுந்த நேரத்தில் உங்களை கட்சியில் சேர்த்து பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னவர், அண்ணா .

ஆகவே சொல்லுகிறேன் இளைஞர்கள் வரவேண்டும் இளைஞர்கள் இல்லாமல் ஒரு காலம் கட்சி வெளியே போய்விடும் ஆகவே இளைஞர்களுக்கு வழி விடுங்கள் ஆனால் வருகிற இளைஞர்கள் கொஞ்சம் தடம் பார்த்து வாருங்கள். கட்சியை நினைத்து வாருங்கள் வந்த உடனே என்ன கிடைக்கும், என எதிர்பார்க்காதீர்கள். உன்னைவிட உழைத்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். உதைபட்டவர்கள் இங்கு நிறைய பேர் இருக்கிறார்கள். கட்சியினால் குடும்பத்தில் கெட்ட பெயர் வாங்கியவர்கள் இருக்கிறார்கள் .அவர்களும் இந்த கட்சியிலே தியாகம் செய்திருக்கிறார்கள் .

ஆகவே தான் இளைஞர்களுக்கு நாம் வழிவிட்டாக வேண்டும் இந்த நிலையை நாம் நினைத்தால் தான் ஒரு இயக்கத்தில் நிலைத்திருக்க முடியும். நீங்கள் நினைத்துப் பார்த்த துண்டா மிசாவில் எல்லோரும் நமது கட்சியை போய் விடும் என நினைத்தார்கள். நான் இருபெரும் தலைவர்களோடு மிக நெருக்கமாகவும் அண்ணாவோடும் பழகியிருக்கிறேன். ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அரசியல் என்பது பொழுதுபோக்கு மடம் அல்ல, அரசியல் என்பது வியாபாரம் அல்ல அரசியல் என்பது கொள்கை பிடிப்பு கொள்கை, நியாயம் இந்த கட்சியில் நாம் இருக்கிறோம் என்பதே ஒரு பெருமைதான். இவர் அவர் பேசினார். நிகழ்ச்சியில் புரவலர் துரை சிங்காரம், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் , தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை ஏ.ஜி ஆறுமுகம் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வி.தயாநிதி, எஸ்.கதிரேசன்,

சி.சந்திரசேகரன், மாநகர துணைச் செயலாளர்கள் ஏ.ஆர் முன்னாஷெரிப்,

ஒய்.தேவநேசன், தங்கமணி ஆனந்தன் மாநகரப் பொருளாளர் நா.அசோகன் பகுதி செயலாளர்கள் ஜி.வன்னிய ராஜா, என்.பரமசிவம், ஆர்.பி.இ சசிகுமார்,

வி.ஜி.கே சுந்தரவிஜி, சத்தியமூர்த்தி ஆர்.கே.ஐயப்பன் முருகப்பெருமாள் கொள்கை பரப்பு துணைச் செயலாளர்கள் சேர்க்காடு டி.கென்னடி, ஜி.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் எம்.நூல்லா, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் பிரம்மபுரம் பழனி மாநகர திமுக பிரதிநிதி வி.ஆர் பூபதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்திய கண்டமே திரும்பி பார்க்கும் வகையில் களம் கண்ட 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வெற்றியை தேடித்தந்த குறிப்பாக வேலூர், அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கு கோட்டை வெளி மைதானத்தில் கழகத்தின் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் கனிம வளம் சுரங்கத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் மற்றும் மண்டி வீதியில் பிரச்சாரம் மேற்கொண்ட மாநில இளைஞ ரணி செயலாளர் இளைஞர் நலன்மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

2 லட்சத்து 15 ஆயிரத்து 702 வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்ற வேட்பாளர் டி.எம் கதிர் ஆனந்த் அவர்களுக்கு வெற்றியை தேடித்தந்த வேலூர் நாடாளுமன்ற வாக்காளர் பெருமக்களுக்கும் 3 லட்சத்து 6 ஆயிரத்து 559 வாக்குகள் வித்தியாசத்தில் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த அரக்கோணம் நாடாளுமன்ற வாக்காளர் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன் அந்த வெற்றிக்கு இரவு பகல் பாராமல் களத்தில் நின்று பணியாற்றிய ஒட்டு மொத்த கழக நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் என அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் _2 தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கட்டி காக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளுக்கு மக்கள் பணியாற்றி 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவு விழாவை கொண்டாடுகிறது எனவே கழக கொடி கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு நம் இரு வண்ணக் கொடியை ஏற்றி பட்டொளி வீசி பறந்திட செய்திட வேண்டும் என கழகத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி வீதிகள் தோறும் பறக்கும் இரு வண்ண கொடி நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும் . கழக கொடி பறக்காத வீடுகள் இல்லை என்னும் வகையில் பவள விழாவை முன்னிட்டு அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள் வணிக வளாகங்களில் கழகக்கொடி ஏற்றிட வேண்டும் என அனைவரையும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. தீர்மானம் 3 செப்டம்பர் 17 சென்னை நந்தனம்

ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழாவில் திரளாக பங்கேற்பதுடன் விழாவில் தலைவர் கலைஞர் பெயரில் விருதுபெறும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கு வாழ்த்துக்களை கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் 4

தமிழக பொருளாதாரம் மேம்படவும் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும்வகையில் அன்னிய முதலீடுகள் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை தமிழகத்திற்கு கொண்டு வர வெளிநாடு பயணம் மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் 5 2026 நடைபெற இருக்கின்ற தமிழக சட்டமன்ற பொது தேர்தலில் கழகத் தலைவர் அவர்கள் 200 தொகுதிகளில் வெற்றி இலக்கு என அறிவிப்பு செய்துள்ளார் எனவே கழகத் தலைவர் தலைமையில் பொற்கால ஆட்சியை தொடங்கிட இன்று முதல் தேர்தல் ஆயத்த பணிகளை செய்வனே செய்திடகேட்டுக் கொள்வதுடன் கழக ஆட்சியில் நிறைவேற்றி வரும் மக்கள் நலத் திட்டங்கள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் தங்கள் பணிகளை அமைத்துக் கொள்ள, அனைத்து கழக நிர்வாக பெருமக்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் பொது உறுப்பினர்களை இக்கூட்டம் ஏகமனதாக கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் கிழக்கு மாவட்டம், ஏற்காடு ஒன்றியம் பொது உறுப்பினர் கூட்டம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ராஜா(எ) ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.